தினகரன்

# நெல் வரத்து அதிகரிப்பால் அரிசி விலை குறைய வாய்ப்பு

பதிவு செய்த நாள் 1/4/2010 1:14:07 AM



சென்னை: தமிழகத்தில் தஞ்சை, நாகப்பட்டினம், திருவண்ணாமலை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர் உட்பட 25 மாவட்டங்களில் நெல் அறுவடை தொடங்கிவிட்டது. ஆந்திரா, கர்நாடகாவில் இருந்தும் அரிசி வருகிறது. இதனால், புது நெல்வரத்து அதிகரித்து அரிசி விலை குறைந்துள்ளது. பழைய அரிசி விலை நிலையாக உள்ளது. இந்த மாத இறுதியில் அரிசி விலை மேலும் சரியும். கடந்த வாரம் ரூ.22க்கு விற்ற சிவப்பு பொன்னி (1 கிலோ) இந்த வாரம் ரூ.20க்கு விற்கப்படுகிறது. அதேபோல், ரூ.24க்கு விற்ற அதிசய பொன்னி ரூ.22, ரூ.26 ஆக இருந்த பழைய அதிசய பொன்னி ரூ.24, ரூ.26க்கு விற்ற பாபட்லா பொன்னி ரூ.24, ரூ.28க்கு விற்ற வெள்ளை பொன்னி ரூ.26, ரூ.24 ஆக இருந்த இட்லி அரிசி ரூ.22க்கு விற்பனையாகின்றன.சர்க்கரை விலை உச்சத்தில் இருக்கிறது. 6 மாதங்களுக்கு முன்பு ரூ.19க்கு விற்ற சர்க்கரை 10 நாட்களுக்கு முன்னர் ரூ.34க்கு விற்பனையானது. இப்போது ரூ.40 ஆக உச்சத்தில் உள்ளது. இந்த தகவலை தமிழ்நாடு அனைத்து மளிகை வியாபாரிகள் சங்க தலைவர் சொரூபன் தெரிவித்தார்.